★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 10௳ வெள்ளி (26—10—56) ★ ★ வெளியூர்: ஐப்பசி 11௳ சனி (27—10—56) [இதழ் 118

சூயஸ் தகராறு: பிரிட்டனுக்கு ஏற்பட்ட விளைவு!

★

லண்டன், அக். 25—

சூயஸ் கால்வாய் தகராறினை ஒட்டி பிரிட்டிஷ் சர்க்கார் செய்த ஏற்பாடுகள்—மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக சுமார் ரூ. 10 கோடி (75-இலட்சம் பவுன்) செலவாகியிருக்கிறதாம்!

இப்போது வாரந்தோறும் ரூ. 1,33,00,000 செலவாகிக் கொண்டு வருகிறதாம்!

'மக்களாட்சி வாழ மாற்றுக் கட்சி தேவை'

'ஜனநாயகத்தை பரீட்சை நடத்தவே தேர்தலில் ஈடுபடுகிறோம்'

'தனிப்பட்ட எவருடைய ஆசாபாசங்களுக்காக அல்ல!'

நமது தூய நோக்கத்தைத் தெளிவாக்குகிறார் அண்ணா

"'அண்ணாதுரையை நம்பாதீர்கள்; அவர் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், எல்லோரையும் ஏமாற்றிவிட்டு மந்திரியாகி விடுவார்' என்று நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூடக் கூறியதாகச் செய்தி பார்த்தேன்.

"அவர் இப்படிச் சொல்வதற்குக் காரணம், 'அப்படிச் செய்யமாட்டேன்' என்பது அவருக்குத் தெரியாததால் அல்ல; மாறாக, 'எவரும் அப்படிச் செய்துவிடக்கூடாது' என்று எச்சரிக்க வேண்டுமென விரும்பியே அவர் அப்படிக் கூறினார் என்று நான் கருதுகிறேன்.

"நான் மந்திரியாக வேண்டும் என்று விரும்பினால், காமராசர் என்னை, எந்தத் தகுதி இல்லை என்று சொல்லி, 'வேண்டாம்' என்று கூறிவிடுவார்? படிப்பு இல்லை-ஆளும் பரம்பரை இல்லை—பயிற்சி இல்லை—என்று, எந்த அடையாளம் எனக்கு இல்லை என்று அவர் என்னை வேண்டாமென்பார்? 'மந்திரியாக வேண்டும்' என்று நான் விரும்பினால் அதற்காக இப்படிப் பெரிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கத் தேவை இல்லையே!

"காங்கிரஸ் கட்சிக்கு இன்று கதவு இல்லை; உள்ளே எவர் எவரோ 'காவலர்'களாக உலவிக்கொண்டிருக்கிறார்களே! கதவு இருந்தாலும் தாள் இல்லை; இருந்தாலும், தாள் போடப்பட்டிருக்காது; போட்டிருந்தாலும், 'தட்டினால் திறக்கப்படும்' என்றல்லவா இல்லையில்தானே காங்கிரஸ் உள்ளது? பின் ஏன் அங்கே போகாமல், இங்கே மக்கள் மன்றத்திற்கு வருகிறேன்?

"எனவே, மந்திரியாக வேண்டும் என்பதற்காகவோ, தனிப்பட்ட ஆசாபாசங்களுக்காகவோ அல்ல, நாம் தேர்தலில் ஈடுபடுவது.

"மந்திரிகள் என்றால், என்ன பெரிய பெருமை என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

"வெங்கடசாமி நாயுடு, மந்திரியாக இருந்தார்—நினைவிருக்கிறதா உங்களுக்கு? ஜோதி அம்மாளின் வெளிச்சம் தெரியவில்லையே! மாதவன் நாயரை நீங்கள் மறந்துவிட்டீர்களே! அப்படி இருக்கும்போது, மந்திரி பதவி என்பது, மக்களின் பேரன்பைவிட — மக்களுக்குச் சேவை செய்வதைவிட எப்படிப் பெரியதாகிவிட முடியும்?

"மந்திரிகள் பலர் மறக்கப்பட்டுப்போன நிலையில், நாம் இன்று மக்களிடத்திலேயே இருக்கிறோமே! இதைவிடவா மந்திரி பதவி பெரிது?

"கருப்பஞ்சாற்றை கையில் வைத்திருப்பவன், பனம்பழம் வேண்டும் என்று எதிர்பார்ப்பான்? பசித்தவனுக்குத்தான் பனம்பழம் வேண்டியிருக்கலாம்.

"தமிழ் நாட்டுப் பொது வாழ்வில்—நீங்கள் எண்ணிப் பார்த்தால் தெரியும்—நான் செல்லப் பிள்ளையாகவே கருதப்பட்டு வந்திருக்கிறேன்.

"பெரியாரிடத்தில் நானிருந்த காலத்திலும் சரி, இப்போதும் சரி—எனக்கென்ன குறை?

"பெரியாரிடத்தில் நான் இருந்த நாட்களில், என்னைப் பார்க்க அவர் எப்போதும் முகம் சுளித்ததே இல்லையே! எனக்கு அவர் தந்த இடத்தை—மதிப்பை இன்றும் அவர், தன்னோடு இருக்கும் எவருக்கும் தரவில்லையே!

"ஈரோட்டில் திராவிடர் கழக மாநாடு நடந்தது; மாநாட்டிற்கு திரு. வி. க. அவர்களும் நானும் சென்றோம்—பத்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததைச் சொல்லுகிறேன்.

"பெரியார் அவர்கள் ஈரோடு நகரசபையினரை, திரு. வி. க. அவர்களுக்கு மட்டுமின்றி எனக்கும் வரவேற்பிதழ் வாசித்தளிக்க ஏற்பாடு செய்திருந்தார்; அது எனக்குத் தெரியாது; நான் சென்றதும் என்னைத் தனியாக அழைத்துப்போய் அகமும் முகமும் மலர, என்னிடத்தில் அந்த ஏற்பாடு பற்றிக் கூறினார்; நான், 'என் ஐயா, இதெல்லாம்' என்றேன்; 'அப்படிச் சொல்லக் கூடாது' என்று அவர் கூறினார்.

"எனவே, நான் பெரியாரிடத்திலிருந்தபோதும், இப்போதும் 'பஞ்ச'த்தில் அடிபட்டிருக்கவில்லை.

"திருவாரூர் ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டிலிருந்து, திராவிடர் கழகத்தில் நான்தான் பொதுச்செயலாளர்—அங்கிருந்து நான் வெளிவரும் வரையில், நான்தான் அங்கே பொதுச்செயலாளராக இருந்தேன்.

"அதேபோல, பெரியாருடன் நான் இருந்த நாட்களில் அவர், தனக்கு என்ன எல்லாம் சுகம் தேடிக்கொண்டாரோ, அதெல்லாம் எனக்கும் தேடித் தரத்தான் செய்தார். இன்னும் கூறப்போனால், பெரியாரை விட்டு வந்த பின், நான் ஏதோ சுகமாக இருப்பதாகச் சிலர் சொல்லுகிறார்கள்; ஆனால், பெரியாரிடத்திலிருந்தபோது, இதைவிடச் சுகமாக இருந்ததாகவே எனக்குத் தோன்றுகிறது. அப்படி என்னை அன்போடு ஊட்டி வளர்த்தவர்தான் பெரியார்!

"அதேபோலவே, நமது பொதுச்செயலாளரையும், நமது கழகத்தில் உள்ள இதர தோழர்களையும், பெரியார், ஒருபோதும் மரியாதைக் குறைவாக நடத்தியதும் இல்லை; மதிப்புவைக்கத் தவறியதும் இல்லை; அப்படி இருந்தவர்கள்தான் நாங்கள்!

"எனவே எங்களில் எவருடையவும் தனிப்பட்ட ஆசாபாசங்களுக்காக அல்ல—நாங்கள் தேர்தலில் ஈடுபடுவது என்பது!

"ஜனநாயகப் பரீட்சை நடத்திப்பார்க்கவே நாங்கள் தேர்தலில் ஈடுபடுகிறோம்,"

என்று, அண்ணா அவர்கள் கடந்த 20-ந் தேதியன்று, சென்னை 41-வது வட்ட தி. மு. கழகக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

எப்படி கழகம் வளர்ந்தது?

"கடந்த எட்டாண்டுகளில், இந்த ஜனநாயகப் பரீட்சையை நடத்துவதற்குத் தேவையான ஆற்றலுடன் கழகம் வளர்ந்திருக்கிறது.

இந்த வளர்ச்சியைப் பெறுவதற்குக் கழகம் எண்ணற்றத் தொல்லைகளைத் தாங்கிக்கொண்டிருக்கிறது; கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறது; ஆபத்துக்களைச் சமாளித்திருக்கிறது; ஆராய்ந்து பார்த்தால், இந்த நாட்டில் ஒவ்வொரு கட்சிக்கும் ஏற்பட்டிருக்கிற கஷ்ட நஷ்டங்கள்—தொல்லைகள் — அதிர்ச்சிகள் இவற்றைவிட நமக்குத்தான் அதிகமான தொல்லைகள் இருந்து வந்திருக்கின்றன.

"அண்மையில் கே. வி. கே. சாமி படுகொலை செய்யப்பட்டார்; முன்பு பாண்டியன், மஜீத், வேலாயுதம்—இப்படிப் பலி கொடுத்திருக்கிறோம்! துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு ஆறு உயிர்களைத் தந்திருக்கிறோம்!

"இப்படிப்பட்டப் பேரிடிகளையும், மன அதிர்ச்சிகளையும் தாங்கிக் கொண்டுதான் நாம் ஓங்கி வளர்ந்து வருகிறோம்.

"இப்படி—கழகத்தை வளர்ப்பதற்குக் கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொள்ளும் நல்ல தொண்டாற்றும் இளைஞர்கள்—நல்ல இதயம் படைத்தவர்கள் கழகத்தின் வரிசைகளில் ஏராளமாயிருக்கிறார்கள்!

"இன்று ஒவ்வொரு ஊரிலும் ஒரு குடிசை வீட்டிலேனும் நமது கொடி பறந்துகொண்டிருக்கிறது! மிகச் சிறிய குக்கிராமங்களிலும் நமது தோழர் ஒருவரேனும் இருக்கிறார்! ஏராளமான தோழர்கள் சிறை சென்ற தியாகத் தழும்பு பெற்றவர்களாக ஆங்காங்கே இருக்கக் காண்கிறோம்! இப்படி, நாம் வளர்ந்து வருகிறோம்! இந்த வளர்ச்சியை ஊக்குவிக்கும் மக்களின் ஆதரவு நமக்குத் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. அந்த ஆதரவினைத் திரட்டி ஒன்றுபடுத்தி, அந்த பலத்தைக் கொண்டுதான் தேர்தலில் போட்டியிடப் போகிறோம்.

"நம்மிடம் பண பலம் இல்லை என்று சிலர் நினைக்கக்கூடும்; ஆனால் ஒன்று கூறுவேன்—தோழர்களே! உங்கள் ஒவ்வொருவரின் உழைப்பும் விலை மதிப்பில்லாதது என்பதை உணருங்கள்! அயராது உழையுங்கள்! பண பலக் குறைவு அப்போது நம்மைப்பாதிக்காது! மேலும் நாம் ரூ. 100 செலவு செய்தால், காங்கிரசார் ரூ. 5000 செலவு செய்தாக வேண்டும் என்கிற நிலைமை இருக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

'எதிர்க்கட்சி இல்லையேல் இந்தியா சர்வாதிகார நாடாகிவிடும்'

'ஆளும் கட்சியை எதிர்க்க அடிப்படை பிரச்சினைகள் நிரம்ப உள்ளன'

எதிர்க்கட்சியின் இன்றியமையாமை குறித்து ஆச்சாரியார்

சென்னை, அக்—26.

"காங்கிரசுக் கட்சியின் இயல்பும் தரமும் கெடாமல் இருப்பதற்கும், நாட்டின் நலன் குன்றாமல் இருப்பதற்கும், காங்கிரசுக் கட்சிக்கு வெளியில் ஒரு எதிர்க்கட்சி உருவாக வேண்டியது இன்றியமையாததாகும். ஒரு மாற்று அரசாங்க அமைப்புக்கு வாய்ப்பு இருந்தால்தான், மக்களாட்சி முறை வெற்றிகரமாகச் செயல்பட முடியும்; இல்லையானால், ஓர் அரசு சர்வாதிகார அரசாக மாறிவிடக்கூடும்."

இக்கருத்தை, சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள், சென்னை - இலட்சுமிபுரம் இளைஞர் சங்கத்தில் பேசியபொழுது குறிப்பிட்டார்.

காங்கிரசிற்கு வெளியில் ஒரு எதிர்க்கட்சி அமைக்கப்படவேண்டும் என, தாம் மதுரை காந்தி கிராமத்தில் பேசிய பேச்சு, எப்படியோ தவறுதலாக—காங்கிரசிற்குள்ளாகவே எதிர்க்கட்சி உருவாக வேண்டும் எனத் தாம் கூறியதாகப் பத்திரிகைகளில் வெளிவந்திருப்பதாகவும், அதை வைத்துக்கொண்டு காமராசர் தம்மைக் குறித்துக் கேலியாகப்பேசி இருப்பதற்கு மறுப்பு கூறியும், ஆச்சாரியார் அந்தக் கூட்டத்தில் பேசினார்.

ஒலிப் பதிவு செய்யப்பட்டிருந்த அவரது காந்திக் கிராமப் பேச்சும் கூட்டத்தில் ஒலிபரப்பப்பட்டது.

மேலும் தொடர்ந்து பேசும்பொழுது, தமது எதிர்க்கட்சிக் கோட்பாடு குறித்து அவர் குறிப்பிட்டதாவது:—

"கட்சி எதுவாக இருந்தபோதிலும், அதன் நோக்கம் மக்கள் நலனும், நீதியுமே யாகும். இவ்விரண்டு கோட்பாடுகளும் அடிப்படையானதும், மக்கள் அனைவருக்கும் பொதுவானதும் ஆகும்.

"அரசாங்கத்திற்கு உண்மையில் அச்சம் விளைவிக்கக் கூடிய ஒரு உண்மையான பலம் பொருந்திய எதிர்க்கட்சி தேவைப்படுகிறது. காங்கிரசிலிருந்து மக்கள் மாறுபடுகிறார்கள் என்பதை இந்த எதிர்க்கட்சிகண்டறிய வேண்டும். அவ்வாறு அறியப்படும் மாறுபாடுகளும், பல்வேறு துறையில் உள்ள மக்களுடைய பேராதரவைப் பெற்றுத் தரக்கூடியனவாக இருக்கவேண்டும்."

அதற்கு விளக்கம் தரும் வகையில் மேலும் ஆச்சாரியார் கூறியதாவது:—

"எதிர்க்கட்சி செயல்படக்கூடிய வகையில் அடிப்படைப் பிரச்சினைகள் இருக்கின்றன. அரசாங்கம் மேற்கொண்டுள்ள 'சமதர்ம மாதிரி' என்ற நடைமுறை சந்தேகத்திற்கிடமின்றிப் பல அநீதிகளைச் செய்திருக்கிறது. எடுத்துக் காட்டாக, நிலம் படைத்தவர்கள் அதனுடைய மதிப்பை இழந்துவிட்டார்கள்; அதன் விளைவாகத் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பதாக அவர்கள் கருதுகிறார்கள். இந்த அநீதிகளை எல்லாம் தங்களுடைய எதிர்ப்பு முனைகளாக எதிர்க்கட்சி கொள்ளலாம்.

"நிலக் குத்தகைக்காரர்கள் புதிய சட்டத்தால் இலாபம் பெற்றிருக்கிறார்கள்; ஆனால் நிலத்தில் பாடுபட்டுவரும் பெரும்பான்மையினரான உழவர்கள் அந்த இலாபத்தைப் பெறவில்லை."

"அதுபோன்றே தொழில் துறையிலும் மாறுபட்ட கருத்துக்கு இடமிருக்கிறது. கிராமத் தொழில்கள், ஆலைத் தொழில்கள், சரிபகுதி ஆலைத் தொழில்கள், சிறு சிறு மின்சாரத் துணைத் தொழில்கள் போன்ற தொழில் முறைகள் இருந்து வருகின்றன. இத்தொழில்களின் மூலம் உற்பத்திப் பெருக்கமா அல்லது வேலை வாய்ப்புப் பெருக்கமா என்பதில் எதிர்க்கட்சி கருத்துச் செலுத்தலாம்."

காங்கிரசுத் தலைவர்களே எதிர்க்கட்சி தேவை என வற்புறுத்தி வருவதையும், ஆனால் எதிர்க்கட்சி உருவாவதைத் தடுக்கும் வகையில் செயல்பட்டு வருவதையும் ஆச்சாரி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 26-10-'56 வெள்ளி

தத்தார் பொய்ப்பிரச்சாரம்!

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டில்லாதவர்கள், தாங்களாக முன்வந்து இந்தியை விருப்புடன் கற்க வகை செய்ய வேண்டுமேயல்லாது, அவர்கள்மீது வலுவில் இந்தியைத் திணிக்க முயலக்கூடாது என இந்தியப் பேரரசின் அமைச்சர்கள் கூறிவரும் அதே நேரத்தில்தான், இந்தியை எப்படியும் திணித்தாக வேண்டும் என்ற கூக்குரலையும் உத்திரப் பிரதேசத்தார் விடாமூச்சாகக் கிளப்பிவருகின்றனர். மேலும் காலந்தாழ்த்தாது, அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள்ளாக, இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாக இந்தி மொழியை முழு அளவில் ஆக்கிவிட வேண்டும் என, இந்தி வெறியர்களான உத்திரப் பிரதேசத்தார் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு இருக்கின்றனர்.

இந்தி மொழியின் தேவை குறித்தும், இன்றியமையாமை குறித்தும் இதுவரை பேசப்பட்டுவந்த நியாயங்கள் அனைத்தும் ஒருபக்கம் இருக்க, இந்தியின் அவசியம் குறித்து ஒரு புத்தம் புதிய நியாயத்தை எடுத்துக்காட்டி இந்தி மொழிக்கு ஆதரவு தேட முயற்சிக்கிறார், தத்தார் என்ற பெயரிய இந்தியப் பேரரசின் அமைச்சர் ஒருவர். அந்த அமைச்சர் கூறும் புது நியாயம், கடுகளவு உண்மையும் கலவாத நூற்றுக்கு நூறும் பொய்யாக அமைந்திருப்பதுதான் வேதனை தரும் விசித்திரமாக இருக்கிறது.

அனைத்திந்திய 'இராஷ்டிர பாஷா பிரச்சார' மாநாட்டைத் துவக்கி வைத்த பொழுது, அமைச்சர் தத்தார், 'மக்களாட்சிக் கோட்பாட்டில் இந்தியா வெற்றிபெற வேண்டுமானால், அதற்கு ஒரு பொது மொழி அவசியமாகிறது' எனக் குறிப்பிட்டு, 'அத்தகு பொதுமொழியாகச் செயல்படுவதற்கு இந்தி மொழியே சிறந்தது' எனவும் வாதிடக் கிளம்பி இருக்கிறார். அவர் கூறுகிறபடி மக்களாட்சி முறை வெற்றிக்கும் ஒருபொது மொழிக்கும் ஏதாவது தொடர்பிருக்கிறதா என்பது குறித்துச் சிறிது ஆராய்வோம்.

அவர் கருத்தை ஆதரிக்கும் வகையில் உலக வரலாற்றில் ஒரு எடுத்துக் காட்டும் இல்லை. எந்த ஒரு நாட்டிலும பொது மொழியின் துணைகொண்டு மட்டுமே மக்களாட்சி முறை சிறப்பெய்தி உரம் பெற்றிருக்கிறது என்பதற்குத் துளியும் ஆதாரம் இருக்கக் காணோம். அமைச்சரின் பேச்சை அரண் செய்யும் வகையில், சனநாயகக் கோட்பாட்டின் வெற்றிக்கு ஒரு பொது மொழி இன்றியமையாததாகும் என அரசியல் தத்துவப் பேராசிரியர் எவரும் வற்புறுத்தி இருப்பதாகவும் காணோம்.

உலக வரலாற்றில இடம் பெறுதலும், அரசியல் தத்துவப் பேராசிரியர்களால் சுட்டிக் காட்டப் பெறுதலுமான மக்களாட்சிக் கொள்கை வெற்றிக்கு ஒரு பொது மொழி தேவைப்படுகிறது என்ற தமது கருத்தை, அமைச்சர் தக்கார் யாண்டு கற்றுணர்ந்தாரோ, நாமறியோம்.

வெற்றிகரமான மக்களாட்சி முறைக்கு எடுத்துக் காட்டாக உலக அறிஞர்களால் அடிக்கடி சுட்டிக் காட்டப்பட்டுவரும் சுவிட்சர்லாந்தில், அமைச்சர் தத்தார் குறிப்பிட்டிருப்பதே போன்று, ஒரு பொது மொழி இடம் பெற்றிருக்கவில்லை. அதற்கு மாறாக, வழக்கில் உள்ள பல மொழிகளில் ஏதாவது ஒன்றைப் பொது மொழியாக ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, வழக்கில் உள்ள மொழிகள் அனைத்தும் ஆட்சி மொழிகளெனக் கொள்ளப்பட்டிருப்பதைத்தான் சுவிட்சர்லாந்தில் நாம் காண்கிறோம்.

அங்கு ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன், உரோமன் ஆகிய நான்கு மொழிகள், ஆட்சி மொழிகளாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. வழக்கில் இருந்துவரும் நான்கை ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொண்டு இருப்பதால், சுவிட்சர்லாந்தில் மக்களாட்சிக் கொள்கை மலர்ந்து மணம் வீசத் தவறிவிட்டது எனக் குறைகூறும் துணிவு, மக்களாட்சிக் கொள்கை வெற்றிக்கு ஒரு பொது மொழி தேவையாகிறது எனக் கூறிடும் அமைச்சர் தத்தாருக்கும் ஏற்படாது என்பது முக்காலும் உறுதியாகும்.

சுவிட்சர்லாந்து போன்றே, கனடாவிலும் பெல்சியத்திலும், இரண்டு மொழிகள் பொது மொழிகள் என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டு மொழிகள் பொது மொழிகளாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதினால், கனடாவிலும் பெல்சியத்திலும் நடைபெறுவது மக்களாட்சி முறையல்ல எனக் கூற, அமைச்சர் தத்தாராலும் முடியாது.

பார்லிமெண்டரி ஆட்சி முறை இடம் பெறாது, தொழிலாளர் சர்வாதிகார ஆட்சி முறை இடம் பெற்றுள்ள பொதுவுடைமை நாடுகளிலும் கூட, அமைச்சர் தத்தார் குறிப்பிடும் ஒரு பொதுமொழிக் கொள்கை இடம் பெற்றிருக்கவில்லை என்பது கருதத்தக்கதாகும்.

யூகோஸ்லாவியாவில் மூன்று ஆட்சி மொழிகள் இடம பெற்றிருக்கின்றன. ரஷ்யாவில் ஆறு மொழிகளுக்கு ஆட்சி மொழிச் சிறப்பு தரப்பட்டிருக்கிறது.

பார்லிமெண்டரி மக்களாட்சிக் கொள்கையை வெற்றியுடன் செயலாற்றிவரும் நாடுகளிலும்சரி, அதை ஏற்றுக்கொள்ளாத பொதுவுடைமை அமைப்பு நாடுகளிலும்சரி, ஒரு பொது மொழிக் கொள்கை இடம் பெற்றில்லாதிருக்கின்ற பொழுது, ஒரு பொது மொழிக் கொள்கையை, இந்தியப் பேரரசு ஏன் உடும்புப் பிடியாகக் கட்டி அழ வேண்டும்? அதிலும் வளமற்ற இந்திக்கு அப்பொதுமொழிச் சிறப்பைக் கொடுத்திருப்பது ஏன்?

மக்களாட்சி முறை கொள்கை வெற்றிக்கு, அமைச்சர் தத்தார் கூறுவதுபோல் ஒரு பொது மொழிக்கு எந்த அவசியமும் கிடையாது என்பது, மேல் குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகளால் வலியுறுத்தப்படுகிறது. நடைமுறை உண்மை இவ்வாறு இருக்க, ஏன் தத்தார் பொய் கூறி, இந்திக்கு ஆதரவு தேடக் கிளம்ப வேண்டும்?

மக்களாட்சி முறை வெற்றிக்கும் ஒரு பொது மொழிக் கருத்துக்கும் முடிபோட்டுப் பொய் கூறத் துணிந்த அமைச்சர் தத்தார், தம் பொய் கூறும் போக்கை அந்த அளவுடனும் நிறுத்திக்கொள்ளவில்லை.

வளமற்றுக் கிடக்கும் இந்தி மொழியை 'உலக மொழி' என்றும், பெரும்பான்மையினரால் பேசப்பட்டு வரும் ஆங்கில மொழிக்கும் சீன மொழிக்கும் அடுத்த நிலையில் இந்தி மொழி கொள்ளத்தக்கது என்றும் அமைச்சர் தத்தார் குறிப்பிட்டிருப்பதின் மூலம், தனது இந்தி மொழிப் பற்றை, வெறி நிலையிலிருந்து காட்டிக் கொண்டு உள்ளார்.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பவர்களுக்கு, மொழி வெறி தலைக்கேறி விட்டிருக்கிறது.

எப்படியாவது வளமற்ற இந்தி மொழிக்கு ஏற்றம் தேட வேண்டும் என்பதற்காக எந்தப் பொய்யையும் கூறலாம் என்ற கண்ணன் காட்டிய வழியைப் பின்பற்றி, அமைச்சர் தத்தார் போன்றவர்கள், இவ்வாறு பொய் கூறிவருகிறார்கள் எனக்கொள்வதைத் தவிர்த்து, அவர்கள் கூற்றில் வேறு உண்மை கிடையாது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

காடு நாடாகும்!

அகதிகளுக்குநிலம் அளிக்கப்படும்

புதுடில்லி, அக். 25—

மத்தியப் பிரதேச மாநிலத்தில் ரெய்கார், சார்கூஜா மாவட்டங்களிலுள்ளதும், 20,000 ஏக்கர் பரப்பளவு உள்ளதுமான காடுகள் சீர்திருத்தப்பட்டு, கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு தலா ஏழு ஏக்கர் நிலம் அளிக்கப்படும் என்று தெரிய வருகிறது.

40,000 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுமாம்

ஐதராபாத், அக். 22—

மத்திய சமூகநல போர்டின் தலைவி துர்காபாய்-தேஷ்முக், கஸ்தூரிபாய் பயிற்சி நிலையத்தில் பேசுகையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அபிவிருத்தித் திட்டத்தில் 40,000 பெண்களுக்குப் பயிற்சியளிக்கப்படும் என்றும், இதுவரை 25,000 பெண்களுக்கு இந்தப் பயிற்சி வசதி அளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மலபார் மாவட்டத்தில் காகிதத் தொழிற்சாலை

சென்னை, அக். 24—

"மலபார் மாவட்டத்தில் நீலாம்பூர் பகுதியில் கிடைக்கும் மூங்கிலைக் கொண்டு ஒரு காகிதத் தொழிற்சாலையைத் துவங்குவதற்குத் தனிப்பட்ட முதலாளிகள் எவரும் முன் வருவார்களேயானால் சர்க்கார் அவர்களுக்கு எல்லாவித உதவிகளையும் செய்து தரும்"

என்று, மேல் சபையில், மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

புதுடில்லி, அக். 24—

இந்தியாவில் பி. சி. ஜி. ஊசி குத்தும் இயக்கத்தை நீடித்து நடத்துவதென இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

'இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன...?'

'மக்களின் இந்த மனப்போக்கு மாறியாக வேண்டும்'

'சங்கரலிங்கனர் சாவுக்குப் பின்னும் காமராசர் சர்க்கார் நீடிக்கிறதே'

அனுதாபக் கூட்டத்தில் ஆசைத்தம்பி முழக்கம்

"ஆந்திர மாநிலம் பிரிக்கப்பட வேண்டும் என்பதற்காக உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த பொட்டி சீராமுலு இந்தப் பகுதியில்தான் வாழ்ந்தார். எந்தக் கோரிக்கைக்காக அவர் உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்தாரோ, அந்தக் கோரிக்கை நிறைவேறி, அதன் பலனை இன்று ஆந்திரர்கள் அனுபவிக்கிறார்கள். அவருக்கு நினைவுச் சின்னமும் ஆந்திரர் எழுப்பிவிட்டனர்; ஆனால் இங்கோ? சங்கரலிங்கனர் சில கோரிக்கைகளுக்காக உண்ணாவிரதம் இருந்தார்—உயிர்நீத்தார். இதே சங்கரலிங்கனர் தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் வேறு எந்தப் பகுதியிலாயினும் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்திருப்பாரேயானால், நாட்டிலே இதற்குள் பெரிய கிளர்ச்சிகள் ஏற்பட்டிருக்கும். அப்படிப்பட்டக் கிளர்ச்சிகள் நமது தமிழ் நாட்டில் ஏற்படாமல் போனதற்குக் காரணமென்ன?

"நமது நாட்டவருக்கு உணர்ச்சியும் வெட்கமும் இல்லை என்பதுதான் இதற்கு உண்மையான காரணம்; நம்மவரிடையே இந்தப் பண்பு இல்லாமைக்குக் காரணம் தமிழர்கள், பரம்பரையிலேயே அப்படிப்பட்டவர்களாக ஆக்கப்பட்டுவிட்டனர். நமது நாட்டில்தான், 'இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?'—என்ற பழமொழியும் இருக்கிறது. இங்கிருக்கிற ஒவ்வொருவருக்கும் தன்னலம்தான் பெரிதே தவிர, பிறர் நலம்—பொதுநலம்—நாட்டு நலம் பற்றிய அக்கரையே கிடையாது. அந்த அளவிற்கு நமது நாட்டு மக்கள் வளர்க்கப்படவில்லை காரணம், நமது பூர்வ சரித்திரத்திலேயே நமது தமிழர்கள் அப்படி ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடையே மொழிப்பற்று, நாட்டுப் பற்று, சமுதாயப்பற்று எதுவுமே வளர்க்கப்படவில்லை. எதையும் எண்ணிப் பார்க்கும் தன்மையற்றவர்களாக அவர்கள் ஆக்கப்பட்டுவிட்டார்கள்.

"சங்கரலிங்கம் செத்தால் என்ன? அவர் அண்ணன் செத்தால் என்ன என்ற எண்ணத்தின் விளைவாக எழுந்தத் தைரியத்தினால் அல்லவா இன்னும் காமராசர் சர்க்கார் நீடித்திருக்கிறது?

"பம்பாய் தங்களுக்கில்லை என்றதும் மராட்டியர், தங்களை ஆட்டிப்படைக்கும் தலைவர்கள் எதுவும் சொல்லாமலேயே தபால் நிலையங்களுக்குத் தீவைத்தார்கள்—இரயில் தண்டவாளங்களைப் பெயர்த்தெறிந்தார்கள்—நேருவின் உருவம் ஒன்றைச் செய்து அதைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள்; அந்த அளவுக்கு மொழி உணர்ச்சி—பொது நலம் அவர்களுக்கு இருந்தது—அவர்கள் அப்படியெல்லாம் செய்தார்கள். ஆனால் நமது தமிழனுக்கோ தன்னலமே பெரிது; அந்த அளவிற்கு அவன் சமுதாயத்தில் பிறக்கும் போதே ஐக்கிய மனோபாவம் இல்லாமல் தோன்றுகிறான்.

"சங்கரலிங்கனர் நியாயமான சில கோரிக்கைகளுக்காக உண்ணாவிரதமிருந்து உயிர் துறந்தார். அவர் மறைவுக்காக நாம் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கூட்டம் போடுகிறோம். பல கட்சியினரும் கூட்டம் நடத்தி அனுதாபம் தெரிவிக்கின்றனர். ஆனால் இப்படி மூலைக்கொருவராகச் சிதறி நின்றுகொண்டு தீர்மானங்கள் போடுவதினால் பலன் கிட்டுமா என்பது சந்தேகமே!

"'தமிழ் நாடு' என்று பெயரிடாவிட்டால், 'இரயில்கள் ஓடாது; சட்டசபையே நடக்காது' என்ற நிலையை நம்மால் உருவாக்க முடியாதா? குசராத்தியர்களும் மராத்தியர்களும் இதேபோல் தானே செய்தார்கள்; அதே போல நாம் மட்டும் ஏன் செய்ய முடியாது?"

இவ்வாறு, 23-10-56-ல், சென்னை பத்திரையன் தெருவில், 14-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், மறைந்த விருதுநகர் தோழர் சங்கரலிங்கனர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சிகள்

'சென்னை மாநிலம்' என்றிருக்கிற பெயர் 'தமிழ் நாடு' என்று மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்காகவும், மற்றும் சில கோரிக்கைகளுக்காகவும் 77 நாட்கள் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த விருதுநகர் வீரர் சங்கரலிங்கனர் அவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து, 23—10—56 மாலை $6\frac{1}{2}$ மணியளவில் சென்னை பத்திரையன் தெருவில் (பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி அருகில்) பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் ரெ. பாரி தலைமை தாங்கினார்.

கூட்டத் துவக்கத்தில் தோழர் உ. பு. இராமதாசன் சிறிது நேரம் இயக்கப் பாடல்கள் பாடினார்.

பின்னர், தலைவர் துவக்கவுரைக்குப் பின் தோழர்கள் கோ. செங்குட்டுவன், டி. வி. நாராயணசாமி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் சங்கரலிங்கனர் மறைவிற்கு அனுதாபம் தெரிவித்தும், அவரை அநியாயமாகச் சாகடித்த காங்கிரஸ் ஆளவந்தார்களின் ஆணவப்போக்கைக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்தின்போது, சங்கரலிங்கனர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஒரு நிமிட நேரம் மௌனமாக இருந்து இறுதி மரியாதை தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

பின்னர், இம்மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' எனப் பெயரிட வேண்டுமாறு ஆட்சியாளரை வற்புறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொதுக்கூட்ட மேடைக்கு முன்னர், தி. மு. கழகத் தேர்தல் சின்னமான 'உதய சூரியன்' மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு அழகுற அமைக்கப்பட்டிருந்தது.

பொதுக்கூட்டம் நடைபெற்ற இடம் மிக நெருக்கடி மிகுந்ததாக இருந்தபோதிலும்கூட, கூடியிருந்த ஆயிரக்கணக்கான பொது மக்கள் இறுதிவரை அமைதியாக இருந்து, சங்கரலிங்கனருக்குத் தங்கள் மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர்.

தொடர்ந்து தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் பேசியதாவது:—

"மறைந்துபோன சங்கரலிங்கனரைப் பற்றிக் காந்தியார் நன்கறிவார்; ஆச்சாரியாருக்கு நன்றாகத் தெரியும். காமராசர் சாதாரணத் தொண்டராக இருந்த காலத்தில் அவரை ஏவல் வாங்கினவர் சங்கர

(3-ம் பக்கம் பார்க்க)

மலேயா--சிங்கப்பூர் நாடுகளில் நடிப்பு-இசைப் புலவர் இராமசாமி

மக்களின் மகத்தான வரவேற்பு

பல்வேறு நிதிகளுக்குப் பகுத்தறிவூட்டும் நாடகங்கள் நடத்துகிறார்

நடிப்பு-இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் தமது குழுவினருடன், மலேயாவிலும் சிங்கப்பூரிலும் நாடகங்கள் பல நடத்தி பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பி வருவது தெரிந்ததே. அவருக்கும், அவர்தம் குழுவினருக்கும் ஆங்காங்கு பல்வேறு இடங்களில் தரப்பட்ட வரவேற்பு, விருந்து உபசாரங்கள்பற்றிய விபரங்களில் சிலவும் அந்த நிகழ்ச்சிகளில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகளின் சாரமும் இங்கு தரப்படுகின்றன.

சிங்கப்பூர் தி.மு. கழகப் பொதுச்செயலாளர் எஸ். சிங்காரவேலு, கே. ஆர். இராமசாமி அவர்களுக்குவரவேற்பு இதழ் வழங்கும் காட்சி

கடந்த இரண்டு திங்களாக மலேயாவில், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் அரிய கலைத் தொண்டு புரிந்து வருகிறார்.

அவரைப் பாராட்டி சிங்கப்பூர் திராவிட முன்னேற்றக் கழகம், 7—10—56ல் 'தமிழ் முரசு' ஆசிரியர் திரு. கோ. சாரங்கபாணி அவர்கள் தலைமையில் ஓர் வரவேற்பு விருந்தளித்தது.

திரு. நாகராசன் அவர்கள், நடிப்புப் புலவரையும், அவர்தம் குழுவினரையும் விருந்தில் கலந்து கொண்ட ஏனையோரையும் வரவேற்றுப் பேசினார்.

பின்னர், தி. மு. க. செயலாளர் தோழர் ந. சிங்காரவேலு கே. ஆர். ஆர். அவர்களுக்கு வரவேற்பு இதழ் ஒன்று வாசித்தளித்தார்.

நடிப்பிசைப் புலவர் ஆற்றிவரும் கலைத்தொண்டைப் பாராட்டி தலைமை வகித்த திரு. சாரங்கபாணி அவர்கள் பேசினார்.

பணமல்ல குறிக்கோள்!

தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்குப் பதிலளிக்கையில் கே. ஆர். இராமசாமி கூறியதாவது:—

"மலேயா பல்கலைக் கழகத்தில் நூல் நிலையம் நிறுவுவதற்காகத் துவக்கப்பட்ட 'தமிழ் எங்கள் உயிர்' நிதி, குறிப்பிட்ட ஒரு இலட்சம் வெள்ளி இலக்கை இன்னும் அடையாதது குறித்து நான் வருந்துகிறேன்; அந்நிதியைப் பூர்த்தி செய்ய நான் நாடகங்கள் நடத்தித் தர விரும்புகிறேன்."

அவர் தொடர்ந்து பேசுகையில், மலேயா மக்களின் நல்வாழ்வுக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் திரு. சாரங்கபாணி அவர்கள் எதிர்காலத்தில் சிங்கப்பூரின் முதலமைச்சராக வருவது நிச்சயமெனக் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், "நான் மலேயாவுக்குப் புறப்படும்போது சென்னையில் என்னை வழியனுப்பிய தோழர்களில் சிலர் நான் நிறையப் பணம் சம்பாதித்துக்கொண்டு வரவேண்டும் என்று வாழ்த்தினார்கள்; நான் திரும்பிப் போய் அவர்களுக்கு உரைக்கப் போவது இதுதான்—'மலேயாவில் நான் சம்பாதித்தது பணமல்ல—ஆயிரக்கணக்கான தோழர்களுடையவும் தோழியர்களுடையவும நல்லெண்ணத்தையே நான் சம்பாதித்துக்கொண்டு வந்திருக்கிறேன்'—என்று!"

திருமதி அமுதவல்லி மூர்த்தி நன்றி நவின்றார்.

ஈப்போவில்...

"தந்தை ஊட்டும் உணவைவிட தாய் ஊட்டும் உணவில் அதிகமான பரிவும் அன்பும் கலந்திருக்கும்; அதைப்போன்று, நீங்[கள்] எனக்கு அளித்த இந்த [வி]ருந்து தாய் ஊட்டும் உண[வை]ப்போல் உள்ளது"

என்று நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள், 16-9-56-ல் ஈப்போ 'தமிழ் எங்கள் உயிர்' நாடக மன்றமும், பாரி சொற் பயிற்சி மன்றமும், சேர்ந்து அளித்த விருந்துபசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

விருந்துபசாரம் ஈப்போ முஸ்லீம் உணவு விடுதியில் சிறப்பாக நடைபெற்றது.

துவக்கத்தில் தோழர் மி. அதரியான் எல்லோரையும் வரவேற்றார்; தோழர் சா. சுப்பையா தலைமையில் விருந்து நடைபெற்றது; தோழர் ம. கு. மணியம் மாலையணிவித்தார். தோழர் சண்முகம் வரவேற்பிதழ் வாசித்தளித்தார்.

தோழர் ந. க. மணிமாறன். மன்றச் சார்பில் ரூ 360 தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக அளித்ததை கே. ஆர். இராமசாமி நன்றியுடன் பெற்றுக்கொண்டார்

வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில் நடிப்பிசைப் புலவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

'நீங்கள் என்மீது காட்டும் அன்பிற்கு நான் மிகக் கடமைப் பட்டுள்ளேன். இங்கு தமிழர்களின் வாழ்க்கை நிலை மேலும் முன்னேற வேண்டும்.

"நான் தமிழகம் சென்று கூடிய விரைவில் அண்ணா அவர்களுடன் மீண்டும் உங்களிடம் வருவேன்.

"நீங்கள் காட்டும் ஆர்வத்தை நான் தமிழகம் சென்று எல்லோருக்கும் எடுத்துக் கூறுவேன்; இதை அழகுக்காகவோ, பெருமைக்காகவோ கூறவில்லை."

தோழர் வே. க. தங்கவேல் நன்றி நவின்றார்.

சிரம்பானில்...

21—9—56ல், சிரம்பான்வாழ் தமிழ்ப் பெருமக்கள், செஞ்சுரி ஓட்டலில், நடிப்பிசைப் புலவருக்குத் தேநீர் விருந்தளித்து, வரவேற்பு இதழ்கள் வாசித்தளித்தனர்; 150 வெள்ளி கொண்ட பண முடிப்பு அளித்தனர். தலைமை தாங்கிய திரு. ஏ. எஸ். தாவுது அவர்கள் நடிப்பிசைப் புலவர் தொண்டினைப் பாராட்டிப் பேசினார்

வரவேற்புக்கு, கே ஆர். ஆர். அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசினார்.

மலாக்காவில்...

25—9—56 முற்பகல் 12 மணியளவில், மலாக்கா தமிழ்ப் பாடசாலையில் திரு எஸ். வி. இராமன் ஜே. பி. அவர்கள் தலைமையில், கே. ஆர். ஆர். அவர்களுக்கும், அவர்தம் குழுவினருக்கும் மலாக்கா வாழ் தமிழ்ப் பெருமக்களால் பாராட்டுக் கூட்டமும் விருந்துபசாரமும் நடைபெற்றது.

ஆசிரியர் எம். கே. மாணிக்கம் வரவேற்றார். தோழர் எஸ். வி. இராமன் தலைமை தாங்கி, நடிப்பிசைப் புலவரின் தொண்டையும் கலைச் சேவையையும் பாராட்டிப் பேசினார்.

பின்னர் நடிப்பிசைப் புலவருக்கும், அவருடைய குழுவினருக்கும் சொ.தங்கவேல் அவர்களாலும், அவருடைய வாழ்க்கைத் துணைவியார் விசாலாட்சிஅம்மையாராலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தன்னையும், தன் குழுவையும் சிறப்பாகப் பாராட்டியதற்கு தோழர் கே. ஆர். இராமசாமி நன்றியைத் தெரிவித்து, 'தமிழரின் நலனுக்காகவும், தமிழின் உயர்வுக்காகவும் என்னால் இயன்ற பணியைச் செய்து வருவேன்,' என்று குறிப்பிட்டார்.

தோழர் த. சு. மு. பெ. மேகநாதன் நன்றிநவின்றார்.

அனுதாபக் கூட்டத்தில் ஆசைத்தம்பி......

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

லிங்கனார். தமக்குப் பணம் இருந்தும் தமது குடும்பத்தைக்கூடக் கவனிக்காமல் பள்ளி ஒன்றுக்கு நிதியாகக் கொடுத்து உதவிய உத்தமர் சங்கரலிங்கம்! அப்படிப்பட்ட உத்தமர் மறைந்தார் என்றால், அம்மறைவிற்கு இப்பொறுப்பற்ற சர்க்கார்தான் காரணம்.

"பொதுவாகக் காமராசர் ஆட்சியில் நாம் அனுதாபக் கூட்டங்களில்தான் அதிகமாகப் பேசுகிறோம். 'இந்த ஆட்சியில் யாருமே வாழ முடியாது; நீங்களெல்லாம் என்னைப்போல் சாகாமல் இருக்க வேண்டுமானால் முதலில் இந்த நாட்டை ஆளும் சர்க்கார் சாகடிக்கப்பட வேண்டும்' என்ற உண்மையைத்தான் சங்கரலிங்கனார் மறைவு நமக்கு உணர்த்துகிறது.

"காங்கிரசாரின் குறைகளை மாற்றக் கட்சியினராகிய நாம் பொதுமக்களிடம் எடுத்துக் கூற முன்வந்தால், 'இவர்களுக்கு வேறு வேலை கிடையாது; காங்கிரசை எதிர்த்துப் பேசுவதுதான் வேலை' என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் சங்கரலிங்கனார் நம்மைப் போன்றவரல்லவே? அவரது குடிசையின்மேல் மூவர்ணக் கொடியல்லவா பறந்துகொண்டிருந்தது? 'காங்கிரஸ் கட்சி நல்ல கட்சிதான்; ஆனால் அந்தக் கட்சியிலோ பேய்கள் குடிகொண்டிருக்கின்றன' என்பதுதான் அவர் கொண்டிருந்த கருத்தாகும்.

"வெள்ளையன் ஆண்ட காலத்தில் நீங்கள் சொன்னீர்களே—'யாருக்கும் சுதந்திர இந்தியாவில் மாதம் ரூ. 500-க்கு மேல் சம்பளம் கிடையாது' என்று! இப்போது மந்திரிகள் 1,500 ரூபாய் வாங்கலாமா? வைசிராய்கள் ஏன்? - கவர்னர்கள் கூடாது என்றெல்லாம் கூறினீர்களே—இப்போது மட்டும் ஏன் கவர்னர்கள் இருக்கிறார்கள்?' என்று நாம் கேட்டால், 'இவர்களெல்லாம் காங்கிரசுக்கு வேண்டாதவர்கள்; எனவே அப்படியெல்லாம் பேசுகிறார்கள்' என்று கூறலாம். ஆனால் சங்கரலிங்கனார் என்ன சொன்னார்? 'காங்கிரஸ் கெட்டுவிட்டது; இன்று அங்கு இருப்பவர்களெல்லாம் காங்கிரசை மோசமான பாதைக்கு இழுத்துச் சென்று விடுகிறார்கள்; எனவே, நான் உண்ணாவிரதம் இருக்கிறேன்'—என்று!

"அண்மையில் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசிய மந்திரி பக்தவத்சலம், 'சங்கரலிங்கம் உண்ணாவிரதம் இருந்தது எனக்குத் தெரியாதே! இறந்த பின்னர்தான் அந்த விஷயமே எனக்குத் தெரியும்' என்று சொன்னாராம்! இப்படிக் கூறுகின்ற மந்திரி பக்தவத்சலத்தைப்பற்றி நாம் என்னதான் நினைப்பது? நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கூட அறிந்திருக்காத இந்த அமைச்சரைப் பற்றி என்ன கருதுவது? ஒரு பொறுப்புள்ள மந்திரி இப்படியா இருப்பது? சங்கரலிங்கனாரின் உண்ணாவிரதம் பற்றிப் பத்திரிகைகள் எல்லாம் எழுதின; போலீசாரின் 'ரிப்போர்ட்' கூடச் சென்றுள்ளது; என்றாலும், பக்தவத்சலனாருக்கு இது தெரியாதாம்!

"ஆந்திரம் தனி மாநிலமாகப் பிரிக்கப்படவேண்டும் என்று கோரி பொட்டி சீராமுலு உண்ணாவிரதம் தொடங்கியதும் நேரு பண்டிதர், 'பொட்டிசீராமுலுவானாலும் சரி யாரானாலும் சரி—யார் இதற்காக உண்ணாவிரதம் இருந்தாலும் இப்போது ஆந்திர மாநிலம் பிரிக்கமுடியாது,' என்று கூறினார். விளைவு? விஜயவாடா இரயில் நிலையத்தைத் தாண்டி இரயில்கள் செல்ல முடியவில்லை; 'கூட்ஸ்' வண்டிகளில் எல்லாம் கொள்ளைகள் நடைபெற்றன; தபால் ஆபீசுகளும், சர்க்கார் அலுவலகங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. முடிவு? ஆணவத்துடன் பேசித்திரிந்த பண்டிதர், 'இதற்காக ஏன் இவ்வளவு அவசரப்படுகிறீர்கள்,' என்று கேட்டுக் கிழிறங்கினார். அதுமட்டுமல்ல—'ஆந்திரமாநிலம் அமையவே முடியாது' என்று எந்த நேரு பண்டிதர் கூறினாரோ, அதே பண்டிதர்தான், முதன் முதலாக மொழிவழி ஆந்திர மாநிலத்தைத் துவக்கியும் வைத்தார்.

"இப்படி ஆந்திரருக்கு இருக்கின்ற ஆர்வம், தீவிரம் அண்மையிலிருக்கும் நமக்கு இல்லையே?

"'தமிழ் நாடு' என்று நமது நாட்டிற்குப் பெயரிடுவதில் எந்தக் கட்சியினருக்கும் வேறுபாடு இல்லை காங்கிரசாரில் பலருக்குக் கூட இதில் வேறுபாடு இல்லை; எவருக்கும் வேறுபட்டக் கருத்தில்லாத இந்தப் பிரச்சினையில் ஏன் நம் நாட்டில் உள்ள கட்சிகள் ஒன்றுபடக்கூடாது?

"இதற்காகத்தான் சங்கரலிங்கனாரும் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்தார். அவருடைய கோரிக்கை நம்முடைய கோரிக்கை—மக்களுடைய கோரிக்கை. எனவேதான் நாம், அந்தக் கோரிக்கையை நிறைவேற்றிவைக்கப் பாடுபடுவோம்."

தீபாவளிக்காக சம்பள முன்பணமாம்!

ஊழியருக்கு சர்க்கார் சலுகை தரும் இலட்சணம்

ரூ. 300—அதற்கும் குறைவாகச் சம்பளம் வாங்குகிற எல்லா பதிவு பெறாத ஊழியர்களுக்கும் சென்னை சர்க்கார் ஒரு மாதச் சம்பளத்தை தீபாவளியை முன்னிட்டு முன்பணமாகத் தர உத்தரவிட்டிருக்கின்றனர்.

நான்கு மாதத் தவணைகளில் இக்கடன் திரும்பப் பெறப்படும்.

இப்போதுள்ள வழக்கப்படி. சர்க்கார் போக்குவரத்து இலாகா ஊழியருக்கு மட்டும் தீபாவளி, ரம்சான், கிறிஸ்துமஸ் விழாக்களின்போது இதுபோன்று சம்பள முன்பணம் தரப்பட்டு வருகிறது

இந்தச் சலுகை, இனி சர்க்கார் ஊழியர் அனைவருக்கும் கிடைக்குமென்று சர்க்கார் அறிவித்துள்ளது

'தற்காலிக' ஊழியர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்காதெனத் தெரி[கிறது].

நெய்வேலித் திட்ட[ம்]

இடவசதிக்கான ஏற்பா[டு]

சென்னை, அக். 24—

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்ட சம்பந்தமாக சுரங்கப் பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைப்பதற்கும், இரயில்கள் ஓடுவதற்கும் பயிற்சிக் கழகங்கள் நிறுவுதற்கும், ஊழியர்கள் தங்குவதற்கும், உற்பத்திப் பிரிவுகள் நிறுவுவதற்கும் 22 கிராமங்களைச் சீர்படுத்திப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வேலைக்கு மூன்றாண்டுக் காலம் தேவைப்படுகிறது என்றும், இதற்காகத் தேவைப்படும் ஊழியர்களை அமர்த்திக்கொள்ளுமாறு மத்திய அரசாங்கம் அனுமதித்துள்ளது என்றும் தெரியவருகிறது.

தடை உத்தரவுக்குக் காரணம் என்ன?

சென்னை, அக். 23—

எம். ஆர். இராதாவின் 'தேவாசுரப் போராட்டம்' எனும் நாடகத்தை மாநிலமெங்கணும் நடத்தக்கூடாது என்று சென்னை சர்க்கார் தடைஉத்தரவு பிறப்பித்துள்ளனர்.

இந்துக்களில் பெரும்பான்மையோரை அவமதிக்கக் கூடியதாகவும், பக்தர்களின் மனதைப் புண்படுத்தக்கூடியதாகவும் இருப்பதுடன் நாடகத்தில் ஆபாசம் கலந்திருப்பதாகவும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உரக் கடன் வசூலிப்பு

நிறுத்திவைக்க உத்தரவு

சென்னை, அக். 23—

நெல்லை மாவட்டத்திலுள்ள நாங்குனேரி, சாத்தான்குளம் ஆகிய பகுதிகளில் இதுவரை அளிக்கப்பட்டுவந்துள்ள குறுகிய கால 'உரக் கடன்'களை 'கட்டாய நடவடிக்கைகள்' மூலம் வசூலிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை சர்க்காரின் மறு உத்திரவு கிடைக்கும் வரையில் நிறுத்தி வைக்குமாறு நெல்லைகலெக்டருக்கு உத்திரவிடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

சலவைத் தொழிலாளருக்கு வீட்டு வசதி

சென்னை, அக். 24—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சலவைத் தொழிலாளர்களின் குடியிருப்பு வசதிக்குத் தனியாக ஏற்பாடு செய்யவில்லை என்றும், ஆனால், குறைந்த வருமானக்காரர்களுக்குக் கூட்டுறவு நிலையங்களின் மூலமும் அபிவிருத்தித் திட்டங்களின் மூலமும் வீடுகள் கட்டிக்கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கிறது என்றும் அமைச்சர் பக்தவத்சலம், மேல்(சட்ட)சபையில் கூறியுள்ளார்.

1,000 ஓராசிரியர் பள்ளிகள் நிறுவப்படுமாம்

சென்னை, அக். 24—

மத்திய அரசாங்க உதவியுடன் சுமார் 1,000 ஓராசிரியர் பள்ளிக்கூடங்களை நிறுவுவதென சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

கல்வி வசதியில்லாத கிராமங்களில் கல்வி வசதி ஏற்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்று அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்துள்ளார்.

சென்னை பல்கலைக் கழகம்

சென்னை, அக். 24—

"தற்போதைய சென்னை மா[நி]லத்திலிருந்து மலபார், தென்கன்னடம் மாவட்டங்கள் பிரிந்து போன பின்னரும்கூட, சிறி[து] காலம் வரையில் இந்த இரு மாவட்டங்களும் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்[டு] இருக்கும்" என்று கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் சட்டசபையி[ல்] தெரிவித்துள்ளார்.

வட எல்லைப் போராட்டம் நிறுத்தப்பட்டது

தமிழரசுக் கழகத்தின் முடிவு

சென்னை, அக். 25—

தமிழரசுக் கழகத்தினர் மேற்கொண்ட 'வடஎல்லைப் போராட்டம்' இன்றுடன் நிறுத்தப்பட்டுள்ளதாக தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அறிவித்துள்ளார். இதற்கு முக்கிய காரணம், சென்னை சட்டசபையில் நிதி அமைச்சர், மத்திய அரசாங்கம் உடனடியாக இந்தத் தகராறைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியிருப்பதேயாகும்.

மேலும், போராட்டத்தை ஒட்டி சிறைப்பட்டுள்ள தொண்டர்கள் அனைவரையும் விடுதலை செய்து விடுவதாகவும் அமைச்சர் வாக்குறுதியளித்துள்ளார் என்று தெரிகிறது.

வடஎல்லைப் பிரச்சினையை மண்டல சபைக்குவிடும் யோசனையை நிராகரித்து மத்திய அரசாங்கமே நேரடியாக பொறுப்பு ஏற்க வேண்டும் என்று மாற்று யோசனை கூறி, டில்லிக்கு சென்னை அரசாங்கம் நேற்று எழுதியுள்ள கடிதத்திற்கு டில்லியின் பதில் தாமதமாகாமல் இருக்க, புதிய மாநில அமைப்புக்குப் பிறகு கல்கத்தாவில் நடைபெறப்போகும் அ. இ. கா. க. கூட்டத்தில் சென்னை அமைச்சர்களும் கலந்து கொள்ளப் போவதால், அங்கு மத்திய அரசாங்க உள்நாட்டு இலாகா அமைச்சர் பந்தையும், மற்றவர்களையும் சந்தித்து வட எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழிகாணுவர் என்று தெரிகிறது.

மக்களாட்சி வாழ...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யார் சுட்டிக்காட்டி குறிப்பிட்டுள்ளதாவது :—

"எதிர்க் கட்சி உருவாக்கப்படுவதற்குத் தேவைப்படும் ஊக்கத்தை, பல விதி கட்டுப்பாடுகளை விதிப்பதின் மூலம் அரசாங்கம் குலைத்து வருகிறது. அரசாங்கத்தின் அதிகாரத்தைத் திரட்டிக்கொண்டிருப்பதைத் தான் காங்கிரசுக் கட்சி செய்து வருகிறது. எதிர்க் கட்சியை உருவாக்கும் முனைப்பு கொள்ளுமாறு உங்களை வேண்டிக் கொள்ளுகிறது; ஆனால் அதே நேரத்தில அந்த முனைப்பைத் துண்டித்து எறியும வகையில் செயல்பட்டு வருகிறது."

எதிர்க் கட்சியை அமைக்க முயற்சிக்கும் தலைவர்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்பது குறித்து ஆச்சாரியார் கூறியுள்ளதாவது:—

"எதிர்க் கட்சியை உருவாக்க முனைகிறவர்கள் நல்லவர்களாகவும் நம்பத் தகுந்தவர்களாகவும் இருக்கவேண்டும். நம்பத்தகாதவர்கள், எதிர்க் கட்சி அமைக்க முயற்சிப்பது பயனளிக்காது. காங்கிரசுக் கட்சியைவிட எதிர்க் கட்சி சிறந்தது என மெய்ப்பிக்கப்படுமானுல் அது மக்களின் ஆதரவைப் பெறுவது சாத்தியமாகும்."

எதிர்க்கட்சியின் அவசியம் பற்றி வலியுறுத்திக் கூறிய ஆச்சாரியார், தனது இயக்கப்படி, 'காங்கிரஸ் கட்சியிலிருக்கும் சிலர்தான் ஒரு எதிர்க்கட்சியை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு மக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்' எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒரு எதிர்க்கட்சி தேவைப்படுகிறது எனக் கூறும் தாமே முன்வந்து எதிர்க்கட்சி ஒன்றைத் துவக்கத் தம்மால் முடியாது என்றும் ஆச்சாரியார், அக்கூட்டத்தில் அறிவித்துள்ளார்:

"ஒர் எதிர்க்கட்சியை மக்கள் உருவாக்க முன்வந்தால் அல்லாது தேச எதிர் காலத்தில் நம்பிக்கை கொள்வதற்கில்லை. ஏனெனில் தேசம் சர்வாதிகாரத்தில் மூழ்கிவிடும்."

சென்னை—இராயபுரம்

சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றப்

பொதுக்கூட்டம்

★

27-10-56 மாலை 6-மணிக்கு சென்னை—இராயபுரம் அம்மன் கோவில் எதிரில் (மாதா கோவில் அருகில்) தோழர் என். சீவரத்தினம் தலைமையில் பனைமரத்தொட்டி சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றச் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெறும். அண்ணா அவர்களும், தோழர் தி. நா. மதிவாணன் ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர். கூட்டத்தில் தி. மு. கழகத் தேர்தல் நிதி வழங்கப்படும்.

கழகக் கூட்டங்கள்

★

வேலப்பாடி :
பாட்டை வீதியில்
28-வது வட்ட தி. மு கழக
3-ம் ஆண்டு விழா
28—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : வி. ஜி. இராசரத்தினம்
பேசுபவர் : ஈ. வெ. கி. சம்பத்
குறிப்பு :—அன்று, கழனி காட்டுத் தெருவில் அண்ணா படிப்பகம் திறக்கப்படும்.

★

தூத்துக்குடி :
சந்தனமாரியம்மன் கோவில்திடல்
28-10-56 மாலை 6-30 மணிக்கு
தலைவர் : ஜோசப்
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
இரா. கிருட்டிணன்

★

செவ்வாய்ப்பேட்டை :
தெய்வநாயகம் பிள்ளை தெருவில்
(பெருமாள் கோவில் அருகில்)
28-10-56 மாலை 8-30 மணிக்கு
தலைவர் : என். திருவேங்கிடம்
பேசுவோர்:
கி. மனோகரன்
ஈ. ஆர். கிருஷ்ணன்
—7-வது வட்ட தி. மு க.

★

ஆற்காடு (வ. ஆ.) :
28—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: கே.எம். இலட்சுமணன்
பேசுபவர் : ப. உ. சண்முகம்

★

உதகை :
போஸ் மைதானத்தில்
28-10-56 பகல் 1-30 மணிக்கு
பேசுபவர் : கோவை-செழியன்

ஆர். அங்கமுத்து மறைவு

சென்னை மாணவர் மன்றம், மணியரசு மன்றம், தொழிலாளர் கழகம், இந்தி எதிர்ப்பு இயக்கம், நீதிக்கட்சி, தி. க., தி. மு. க., இளைஞர் சங்கம் முதலிய பல கழகங்களிலும் இயக்கங்களிலும் நெருங்கிய தொடர்பு கொண்டு அல்லும் பகலும் உழைத்துவரும் பொது நலத் தொண்டரும் ஆகிய தோழர் ஆர். அங்கமுத்து அவர்கள் 25—10—56 இரவு 8-30 மணி அளவில் உயிர் நீத்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் அறிவித்துக் கொள்ளுகிறோம்; அவரிடம் சடலம், 26-10-56 மாலை 5-மணிக்கு, ஏ ழு கிணறு, எண்—43, தையப்ப முதலி தெருவிலிருந்து மூலக்கொத்தளம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

—(ஆ-ர்)

விருத்தாசலத்தில் ஈ. வெ. கி. சம்பத்

1—11—56-ல், விருத்தாசலம் வானொலித் திடலில், தோழர் ஈ வெ. கி. சம்பத் அவர்கள் பேசுவார்.

அண்ணா தெளிவுரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"மேலும், நாம் ஒன்றும் எப்படியாவது வெற்றி பெற்றே ஆகவேண்டும் என்று விரும்பவில்லை —எண்ணவில்லை. 'எப்படியேனும் வெற்றி பெறவேண்டும்' என்று எண்ணுகிறவர்கள்தான் பண பலத்தைப் பற்றி அதிகம் கவலைப்படவேண்டும்.

"நாம், நமது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுவதற்காகவே தேர்தலில் ஈடுபடுகிறோம்."

சர்க்கார் ஊழியர்களுக்கு பஞ்சப்படி உயர்வு

ஆசிரியர்களும் கடைநிலை ஊழியர்களும் பயன் பெறுவர்

சென்னை, அக். 25—

தனது ஊழியர்களுக்கு, சென்னை சர்க்கார் ரூ. 5 கிராக்கிப்படி உயர்வு தர முடிவு செய்திருக்கிறார்களாம்—அழுத பிள்ளைக்கு வாழைப் பழம் தருவது போல !

ரூ. 300-க்குக் குறைவான சம்பளம் வாங்கும் ஊழியர்களுக்கு ரூ 5 கிராக்கிப்படி உயர்வு கிடைக்கும்.

இப்போது ரூ. 18 கிராக்கிப்படி பெற்றுக் கொண்டிருக்கும் ஊழியர்கள், பியூன்கள், தொழிலாளர்கள் எல்லாம் இனி ரூ. 25 கிராக்கிப்படி பெறுவர்— (ரூ. 7 உயர்வு)

ரூ. 19 கிராக்கிப்படி பெறும் போலீசார் முதலியவர்கள் இனி ரூ. 25 பெறுவர்—(ரூ. 6 உயர்வு)

இந்த ஏற்பாட்டினால் 2,86,400-பேர்கள் பலன் அடைவர் என்று தெரியவருகிறது.

இதனால் சர்க்காருக்கு ஆண்டு தோறும் ரூ. 1,90,00,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த கிராக்கிப்படி உயர்வு வரும் நவம்பர் முதல் சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படும் என்றும் தெரியவருகிறது.

ஆசிரியர்களுக்கும், ஸ்தல ஸ்தாபனங்களில் வேலை செய்பவர்களுக்கும்கூட இந்தப் பஞ்சப்படி உயர்வு தரப்படும்.

இந்தத் தகவல்களை சட்டசபையில் நிதிமந்திரி சுப்பிரமணியம் தந்திருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமை நிலையச் செய்தி :

சென்னை மாவட்டத்தில் தேர்தல் ஆய்வுக்குழுவின் விசாரணை

28—10—56 ஞாயிறு காலை 'அறிவக'த்தில் நடைபெறும்

சென்னை மாநிலத்திலுள்ள எல்லாத் தொகுதிகளின் தேர்தல் சூழ்நிலையை அறியத் தேர்தல் ஆய்வுக் குழுவினர் 28-10-56 காலை 9-மணிக்கு, இராயபுரம் 'அறிவக'த்தில் தங்களின் பணியைத் துவக்குவார்கள்.

விசாரணை கீழ்க்கண்ட வரிசைப்படி நடைபெறும்.

ஒவ்வொரு தொகுதியிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள், தேர்தல் சூழ்நிலையை தெரிவிக்கக்கூடிய முக்கியஸ்தர்கள் அனைவரும் ஆய்வுக் குழுவின் முன் தங்களின் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேம்.

ஒவ்வொரு தொகுதியிலிருந்துவரும் தோழர்கள் தேர்தலைப் பற்றிய விவரம் தருவதில் ஒத்த கருத்துடையவர்களாயிருப்பின் சேர்ந்தோ, இல்லையெனில் தனித்தனியாகவோ ஆய்வுக் குழுவின்முன் தங்களின் எண்ணத்தைத் தெரிவிக்கலாம். ஆய்வுக்குழுவின் பணி இனிது நிறைவேறும் வகையில் அந்தந்தத் தொகுதியிலிருந்து வரும் தோழர்கள், தேர்தல் சூழ்நிலை பற்றிய விவரங்களை அறிந்து வருமாறும் கேட்டுக்கொள்கிறேம்.

★

1. வண்ணைத் தொகுதி :
புது வண்ணை, இராயபுரம், சிங்காரத்தோட்டம், சஞ்சீவிராயன்பேட்டை வட்டங்கள்.

2. ஆர்பர் தொகுதி :
ஏழுகிணறு, அம்மன்கோயில், முத்தியாலுப்பேட்டை, ஆர்பர், கச்சாலீஸ்வரர் கொததவால்சாவடி, சவுக்கார் பேட்டை, போர்ட்செயின்ட் ஜியார்ஜ் வட்டங்கள்.

3. பேசின் பிரிட்ஜ் தொகுதி:
கொருக்குப்பேட்டை, பேசின்பிரிட்ஜ், பெத்துநாய்க்கன்பேட்டை, டிரிப்ளியன் பேசின், எடப்பாளையம் வட்டங்கள்.

4. பெரம்பூர் தொகுதி :
வியாசர்பாடி, சூளை, புளியந்தோப்பு, பெரம்பூர் பாரக்ஸ், செம்பியம், அயனபுரம், புரசைவாக்கம், குயப்பேட்டை வட்டங்கள்.

5. ஆயிரம்விளக்குதொகுதி
கீழ்ப்பாக்கம், ஆயிரம் விளக்கு, நுங்கம்பாக்கம், இராயப்பேட்டை, புதுப்பாக்கம் வட்டங்கள்.

6. எழும்பூர் தொகுதி :
வேப்பேரி, பெரியமெட்டு, பார்க் டவுன், நேப்பியர் பார்க், சிந்தாதிரிப்பேட்டை, கோமளீஸ்வரன்பேட்டை, எழும்பூர் வட்டங்கள்.

7. திருவல்லிக்கேணி தொகுதி :
திருவட்டீஸ்வரன் பேட்டை, சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, ஜாயஜார், மீர்சாகிப்பேட்டை வட்டங்கள்.

8. மயிலாப்பூர் தொகுதி :
மயிலை வடக்கு, மயிலை தெற்கு, தேனும்பேட்டை, அடையாறு வட்டங்கள்.

9. தியாகராயநகர் தொகுதி:
கோடம்பாக்கம், தியாகராயநகர் வடக்கு, தியாகராயநகர் தெற்கு, சைதாப்பேட்டை, கிண்டி வட்டங்கள்.

★

28—10—56 காலை 9 மணிக்குச் சரியாய் ஆய்வுக் குழுவின் பணி துவங்கப்படுமாதலால், அந்தந்தத் தொகுதியிலுள்ள தோழர்கள் குறித்த நேரத்திற்குள் 'அறிவகம்' வருமாறு கேட்டுக் கொள்ளுகிறேம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சென்னை 17-வதுவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு :

28-10-56 மாலை 4-மணியளவில் சூளை தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம், சூளை-நரசிங்கப்பெருமாள் கோவில்தெரு, எண் 4-ல் நடைபெறும்; அதுபோது, ஆண்டறிக்கை, சந்தா, செயற்குழுவில் காலியான பதவிகளைப் பூர்த்தி செய்தல், தேர்தல் குழு அமைத்தல் ஆகியவைகள் மேற்கொள்ளப்படும்.

சென்னை 27-வதுவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு :

26—10—56 இரவு 9-மணிக்கு, மேற்படி வட்டக் கிளையின் தி. மு. கழகப் பொது உறுப்பினர்களின் அவசரக் கூட்டம், இடைப்பாளையம்—பூங்கா நகர் அனுமந்தராயன் கோயில தெரு, எண் 32-ல் நடைபெறும். தோழர்கள் அனைவரும் தவறாது வருகைதரக் கோரப்படுகின்றனர்.

சிம்சன் குரூப் தொழிலாளர் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்குழுக் கூட்டம்

27-10-56 மாலை 3 மணிக்கு சென்னை 29-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் (31, வாலர்ஸ் ரோட், சிந்தாதிரிப்பேட்டை) மேற்படி நிதிக்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

சென்னை-சூளை தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

27-10-56 இரவு 8 மணிக்கு மேற்படி செயற்குழுவின் அவசரக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்: அதுபோது, ஆண்டறிக்கை, தேர்தல் குழுவினரைச் சந்தித்தல், பொது உறுப்பினர் கூட்டத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல் ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சென்னை—வண்ணை வள்ளுவர் இளைஞர்மன்றம்

சென்னை—வண்ணை வள்ளுவர் இளைஞர் மன்றத்தில், தோழர் எஸ். கன்னியப்பன் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; மன்றத் தோழர்களும் பொது மக்களும் கலந்து கொள்ளக்கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (கூட்டத்தேதி குறிப்பிடவில்லை)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ.